පොලිස් මාධ්‍ය කොට්ඨාසය
**பொலிஸ் ஊடகப் பிரிவு**
**POLICE MEDIA DIVISION**
සෙත්සිරිපාය, බත්තරමුල්ල


| | | | | | |
|---|---|---|---|---|---|
| තැ.පෙ.අංකය<br>த. பெ.இ<br>Po.Box No | 10120 | | | ෆැක්ස්<br>தொலைநகல<br>Fax | 011-2171635 |
| දුරකථන<br>தொலைபேசி<br>Telephone | 011-2887973<br>(HUNTING) | වෙබ්.ලිපිනය<br>இணையதளம்<br>Web Site | www.Police.lk | ඊ මේල්<br>மின்னஞ்சல்<br>E-mail | dir.media@police.gov.lk |


| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இலக்கம்<br>My NO | 960 /2023 | ඔබේ අංකය<br>உமது இலக்கம்<br>Your No | /2023 | දිනය<br>திகதி<br>Date | 2023.08.04<br>1720hrs |

# ஊடக அறிக்கை

தலைமை ஆசிரியர் / செய்தி ஆசிரியர்,
செய்தி பணிப்பாளர் / செய்தி முகாமையாளர்,
சகல ஊடக நிறுவனங்கள்.

## 119 பொலிஸ் அவசர அழைப்புப் பிரிவு தொடர்பாக பொதுமக்களுக்கான அறிவித்தல்.

சகல குடிமக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படும் போது ஏற்பட கூடிய அசௌகரியங்களிலிருந்து பொதுமக்களை பாதுகாப்பதற்காக 24 மணி நேரமும் சட்டபூர்வ பாதுகாப்பை வழங்கி சுதந்திரமானதும், அமைதியானதுமான வாழ்க்கைச் சூழலை ஸ்தீரப்படுத்தும் வகையில் இலங்கை பொலிசினால் அறிமுகப்படுத்தப்பட்டதே, 119 அவசர அழைப்பு தொலைபேசி இலக்கமாகும்.

மிரிஹானையில் உள்ள பொலிஸ் மா அதிபரின் கட்டளையிடும் தகவல் பிரிவில் ஸ்தாபிக்கப்பட்ட 119 பொலிஸ் அவசர அழைப்புப் பிரிவானது 24 மணி நேரமும் நடைமுறையில் உள்ள ஒரு பிரிவாகும்.

தினமும் 3000 – 5000 வரையிலான முறைப்பாடுகள் 119 அவசர அழைப்புப் பிரிவிற்கு கிடைக்கப்பெறுவதுடன், அவ்வாறு கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் உடனடியாக சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டு அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், தினமும் கிடைக்கும் முறைப்பாடுகளை பகுப்பாய்வு செய்யும் போது பொதுமக்களால் 119 தொலைபேசி இலக்கத்தை தவறான முறையில் பயன்படுத்தி உண்மைக்குப்புறம்பான முறைப்பாடுகளை வழங்குவதை அவதானிக்கமுடிகின்றது.

119 தொலைபேசி ஊடாக பெறப்படும் முறைப்பாடுகள் மிக முக்கியமானது என்பதுடன் அதனை மிக விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கு இவ்வாறான போலியான முறைப்பாடுகளால் இடையூறுகளும் தாமதங்களும் ஏற்படலாம்.

ஆகவே, பொதுமக்களால் 119 தொலைபேசி இலக்கத்தை உபயோகிக்கும் போது முறைகேடான வழியிலன்றி, முன்னுரிமை மற்றும் நம்பகத்தன்மையான தகவல்களை வழங்கி துரித கதியில் நடைமுறைப்படுத்த வேண்டிய சம்பவங்கள் தொடர்பில் மாத்திரம் இவ் இலக்கத்தை உபயோகிக்குமாறு பொலிஸ் ஊடகப் பிரிவு பொது மக்களிடம் வேண்டுகோள்விடுக்கின்றது. உண்மைக்குப் புறம்பானதும் நம்பகத்தன்மையற்றதுமான தகவல்களை பொலிசாருக்கு வழங்கும் போது இலங்கை தண்டனைச் சட்டக் கோவை 180 வது பிரிவிற்கமைய குற்றவாளியாவதுடன், 06 மாதக் காலத்திற்கு குறையாத சிறைதண்டனைக்கோ அல்லது தண்டப்பணம் செலுத்துவதற்கோ அல்லது இருவகையிலொருவகையினால் குற்றவாளியாக்கப்படுவீர் என மேலும் அறியத்தருகின்றோம்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் காரியாலயம்
பொலிஸ் ஊடகப் பிரிவு